**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.393/2020</u>**

**நாள்– 30.04.2026**

**வா.சா. 2 – ஜனார்த்தனன், கிராம நிர்வாக அலுவலர், மோடமங்கலம்அக்ரஹாரம்**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் தாவா சொத்தினை பார்வையிட்டு சாட்சியமளிக்க வந்துள்ளேன். மோடமங்கலம் அக்ரஹாரம் கிராமம் சர்வே எண்.136/1ஏ1டி மற்றும் சர்வே எண்.136/1ஏ3 ஆகியவற்றிற்கான பட்டா எண்.824 ராமசாமி மனைவி மல்லிகா மற்றும் மகன் மகாராஜா பெயரில் கூட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் தென்னை சாகுபடி செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். சர்வே எண்.136/1ஏ1டில் ஆழ்துளை கிணறு மற்றும் மின்சார இணைப்பு உள்ளன. சர்வே எண்.136/1ஏ3ல் ஆழ்துளை கிணறு மட்டும் உள்ளது. சர்வே எண்.136/1ஏ3ல் மின் இணைப்பு எதுவும் இல்லை. சர்வே எண்.136/1ஏ1டி–ல் மின் இணைப்பு உள்ளது, மின் இணைப்பு எண் தெரியவில்லை. வா.சா.ஆ.4 எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டதாகும்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வா.சா.ஆ.4 ஆவணம் என்னால் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்கூறிய விவரங்கள் குறித்து நான் கள ஆய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல, கள ஆய்வு செய்தேன். நான் தற்போது செய்த கள ஆய்வு அடிப்படையில் வாதிகளுக்கு சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 நான் வழங்காத நிலையிலும், நான் கள ஆய்வு எதுவும் செய்யாத நிலையிலும் வாதிகளுக்கு நான் சான்றிதழ் எதுவும் வழங்காத நிலையிலும் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**